ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருப்பரமபதம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமானுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருப்பரமபதம்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த3யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்3ய பூ4ஷணம் ।
ஸ்ரீமத்3வேங்கடநாதா2ர்யம் வந்தே3 வேதா3ந்ததே3ஶிகம் ॥ 1 ॥

ஸ்ரீஶைலேஶ த3யாபாத்ரம் தீ4ப4க்த்யாதி3கு3ணார்ணவம் ।
யதீந்த்3ரப்ரவணம் வந்தே3 ரம்யஜாமாதரம் முநிம் ॥ 2 ॥

லக்ஷ்மீநாத2ஸமாரம்பா4ம் நாத2யாமுநமத்4யமாம் ।
அஸ்மதா3சார்யபர்யந்தாம் வந்தே3 கு3ருபரம்பராம் ॥ 3 ॥

யோ நித்யமச்யுதபதா3ம்பு3ஜயுக்3மருக்ம -
    வ்யாமோஹதஸ்ததி3தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்3கு3ரோர்ப4க3வதோஸ்ய த3யைகஸிந்தோ4:
    ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்3யே ॥ 4 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ4தி:
    ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம் ।
ஆத்3யஸ்ய ந: குலபதேர்வகுளாபி4ராமம்
    ஸ்ரீமத் தத3ங்க்4ரியுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா ॥ 5 ॥

பூ4தம் ஸரஶ்ச மஹதா3ஹ்வய ப4ட்டநாத2
    ஸ்ரீப4க்திஸார குலஶேக2ர யோகி3வாஹாந் ।
ப4க்தாங்க்4ரிரேணு பரகால யதீந்த்3ர மிஶ்ராந்
    ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ 6 ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ‖ **1.1.5** ‖

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ‖ **1.1.6** ‖

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.7** ‖

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.8** ‖

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே || **1.1.12** ||

## பெரியாழ்வார் திருமொழி – ஆனிரை

அண்டத்தமரர்கள் சூழ ⋆
அத்தாணியுள் அங்கிருந்தாய் ! ⋆
தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய் ! ⋆
தூமலராள் மணவாளா ! ⋆
உண்டிட்டுலகினை ஏழும் ⋆
ஓர் ஆலிலையில் துயில் கொண்டாய் ! ⋆
கண்டுநான் உன்னை உகக்கக் ⋆
கருமுகைப் பூச் சூட்ட வாராய் || **2.7.9** ||

## பெரியாழ்வார் திருமொழி – நாவலம்

வான் இளவரசு வைகுந்தக் குட்டன் ⋆
வாசுதேவன் மதுரை மன்னன் ⋆
நந்த கோன் இளவரசு கோவலர் குட்டன் ⋆
கோவிந்தன் குழல் கொடூதின போது ⋆
வான் இளம் படியர் வந்து வந்தீண்டி ⋆
மனம் உருகி மலர்க் கண்கள் பனிப்பத் ⋆

தேன் அளவு செறி கூந்தல் அவிழச் ⋆
சென்னி வேர்ப்பச் செவி சேர்த்து நின்றனரே ॥ **3.6.3** ॥

### பெரியாழ்வார் திருமொழி – தங்கையை மூக்கும்

‡ வட திசை மதுரை சாளக்கிராமம் ⋆
வைகுந்தம் துவரை அயோத்தி ⋆
இடம் உடை வதரி இடவகை உடைய ⋆
எம் புருடோத்தமன் இருக்கை ⋆
தடவரை அதிரத் தரணி விண்டிடியத் ⋆
தலைப்பற்றிக் கரை மரம் சாடி ⋆
கடலினைக் கலங்கக் கடுத்திழி கங்கைக் ⋆
கண்டம் என்னும் கடிநகரே ॥ **4.7.9** ॥

### பெரியாழ்வார் திருமொழி – சென்னியோங்கு

‡ தட வரைவாய் மிளிர்ந்து மின்னும் ⋆
தவள நெடுங்கொடிப் போல் ⋆
சுடர் ஒளியாய் நெஞ்சின் உள்ளே ⋆
தோன்றும் என் சோதி நம்பி ! ⋆
வட தடமும் வைகுந்தமும் ⋆
மதிள் துவரா பதியும் ⋆
இட வகைகள் இகழ்ந்திட்டு ⋆
என் பால் இடவகை கொண்டனையே ॥ **5.4.10** ॥

### ஆண்டாள் அருளிச்செய்த – திருப்பாவை

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத் ⋆
தூபம் கமழத் துயில் அணைமேல் கண் வளரும் ⋆
மாமான் மகளே ! மணிக் கதவம் தாள் திறவாய் ⋆

மாமீர் ! அவளை எழுப்பீரோ ⋆
உன் மகள் தான் ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ ⋆
ஏமப் பெருந் துயில் மந்திரப் பட்டாளோ ⋆
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று ⋆
நாமம் பலவும் நவின்றேலோர் எம் பாவாய் ॥ **9** ॥

### திருமழிசைப்பிரான் அருளிச்செய்த – திருச்சந்தவிருத்தம்

மண்ணுளாய் கொல் விண்ணுளாய் கொல் ⋆
மண்ணுளே மயங்கி நின்று ⋆
எண்ணும் எண் அகப்படாய் கொல் ⋆
என்ன மாயை ⋆
நின் தமர் கண்ணுளாய் கொல் சேயை கொல் ⋆
அனந்தன் மேல் கிடந்த எம் புண்ணியா ⋆
புனந்துழாய் ⋆
அலங்கல் அம் புனிதனே ! ॥ **45** ॥

### திருப்பாணாழ்வார் அருளிச்செய்த – அமலனாதிபிரான்

‡ அமலன் ஆதி பிரான் ⋆
அடியார்க்கென்னை ஆட்படுத்த விமலன் ⋆
விண்ணவர் கோன் ⋆
விரையார் பொழில் வேங்கடவன் ⋆
நிமலன் நின்மலன் நீதி வானவன் ⋆
நீள் மதிள் அரங்கத்தம்மான் ⋆
திருக்கமல பாதம் வந்து ⋆
என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே ॥ **1** ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருக்குறுந்தாண்டகம்

தொண்டெல்லாம் பரவி நின்னைத் ⋆
தொழுதடி பணியுமாறு கண்டு ⋆
தான் கவலை தீர்ப்பான் ஆவதே ⋆
பணியா எந்தாய் ⋆
அண்டமாய் எண் திசைக்கும் ⋆
ஆதியாய் நீதி ஆன ⋆
பண்டமாம் பரம சோதி ! ⋆
நின்னையே பரவுவேனே ‖ **11** ‖

## திருவாய்மொழி – அணைவது

புலன் ஐந்துமேயும் ⋆
பொறி ஐந்தும் நீங்கி ⋆
நலம் அந்தம் இல்லதோர் ⋆
நாடு புகுவீர் ⋆
அலமந்து வீய ⋆
அசுரரைச் செற்றான் ⋆
பல முந்து சீரில் ⋆
படிமின் ஓவாதே ‖ **2.8.4** ‖

## திருவாய்மொழி – சன்மம் பலபல

இடர் இன்றியே ஒரு நாள் ஒரு போழ்தில் ⋆
எல்லா உலகும் கழிய ⋆
படர் புகழ்ப் பார்த்தனும் வைதிகனும் ⋆
உடன் ஏறத் திண் தேர் கடவி ⋆
சுடர் ஒளியாய் நின்ற தன்னுடைச் சோதியில் ⋆
வைதிகன் பிள்ளைகளை ⋆

உடலொடும் கொண்டு கொடுத்தவனைப் பற்றி ⋆
ஒன்றும் துயர் இலனே ॥ **3.10.5** ॥

### திருவாய்மொழி – மண்ணை

‡ மண்ணை இருந்து துழாவி ⋆
வாமனன் மண் இதுவென்னும் ⋆
விண்ணைத் தொழுதவன் மேவு ⋆
வைகுந்தம் என்று கை காட்டும் ⋆
கண்ணை உண்ணீர் மல்க நின்று ⋆
கடல் வண்ணன் என்னும் அன்னே ! ⋆
என் பெண்ணைப் பெரு மயல் செய்தாற்கு ⋆
என் செய்கேன் பெய் வளையீரே ॥ **4.4.1** ॥

### திருவாய்மொழி – என்றைக்கும்

வைகுந்த நாதன் ⋆
என் வல்வினை மாய்ந்தறச் ⋆
செய் குந்தன் தன்னை ⋆
என் ஆக்கி என்னால் தன்னை ⋆
வைகுந்தன் ஆகப் புகழ ⋆
வண் தீங்கவி ⋆
செய் குந்தன் தன்னை ⋆
என்னாள் சிந்தித்தார்வனோ ॥ **7.9.7** ॥

### திருவாய்மொழி – நங்கள் வரிவளை

இடை இல்லை யான் வளர்த்த கிளிகாள் ⋆
பூவைகாள் ! குயில்காள் ! மயில்காள் ⋆
உடைய நம் மாமையும் சங்கும் நெஞ்சும் ⋆

ஒன்றும் ஒழிய ஒட்டாது கொண்டான் ⋆
அடையும் வைகுந்தமும் பாற்கடலும் ⋆
அஞ்சன வெற்பும் அவை நணிய ⋆
கடையறப் பாசங்கள் விட்ட பின்னை அன்றி ⋆
அவன் அவை காண் கொடானே ॥ **8.2.8** ॥

## திருவாய்மொழி – ஓராயிரமாய்

ஆகம் சேர் ⋆
நரசிங்கம் அதாகி ⋆
ஓர் ஆகம் வள் உகிரால் ⋆
பிளந்தான் உறை ⋆
மாக வைகுந்தம் ⋆
காண்பதற்கு ⋆
என் மனம் ஏகம் எண்ணும் ⋆
இராப் பகல் இன்றியே ॥ **9.3.7** ॥

## திருவாய்மொழி – எங்கானல்

தெளி விசும்பு கடிதோடித் ⋆
தீ வளைத்து மின் இலகும் ⋆
ஒளி முகில்காள் ! ⋆
திருமூழிக்களத்துறையும் ஒண் சுடர்க்கு ⋆
தெளி விசும்பு திருநாடாத் ⋆
தீ வினையேன் மனத்துறையும் ⋆
துளி வார் கட்குழலார்க்கு ⋆
என் தூதுரைத்தல் செப்புமினே ॥ **9.7.5** ॥

## திருவாய்மொழி – செஞ்சொற்கவிகாள்

‡ திருமாலிருஞ்சோலை மலையே ⋆
திருப்பாற்கடலே என் தலையே ⋆
திருமால் வைகுந்தமே ⋆
தண் திருவேங்கடமே எனதுடலே ⋆
அரு மா மாயத்தெனதுயிரே ⋆
மனமே வாக்கே கருமமே ⋆
ஒரு மா நொடியும் பிரியான் ⋆
என் ஊழி முதல்வன் ஒருவனே ‖ **10.7.8** ‖

## திருவாய்மொழி – திருமாலிருஞ்சோலைமலை

எளிதாயின ஆறென்று ⋆
என் கண்கள் களிப்பக் ⋆
களிதாகிய சிந்தையனாய்க் ⋆
களிக்கின்றேன் ⋆
கிளி தாவிய சோலைகள் சூழ் ⋆
திருப்பேரான் ⋆
தெளிதாகிய ⋆
சேண் விசும்பு தருவானே ‖ **10.8.4** ‖

## திருவாய்மொழி – சூழ்விசும்பு

‡ சூழ் விசும்பணி முகில் ⋆
தூரியம் முழக்கின ⋆
ஆழ் கடல் அலை திரைக் ⋆
கை எடுத்தாடின ⋆
ஏழ் பொழிலும் ⋆
வளம் ஏந்திய என் அப்பன் ⋆

வாழ் புகழ் நாரணன் ⋆
தமரைக் கண்டுகந்தே ॥ **10.9.1** ॥

நாரணன் தமரைக் கண்டுகந்து ⋆
நன்னீர் முகில் ⋆
பூரண பொற்குடம் ⋆
பூரித்ததுயர் விண்ணில் ⋆
நீர் அணி கடல்கள் ⋆
நின்றார்த்தன ⋆
நெடு வரைத் தோரணம் நிரைத்து ⋆
எங்கும் தொழுதனர் உலகே ॥ **10.9.2** ॥

தொழுதனர் உலகர்கள் ⋆
தூப நல் மலர் மழை பொழிவனர் ⋆
பூமி அன்றளந்தவன் ⋆
தமர் முன்னே ⋆
எழுமின் என்றிருமருங்கிசைத்தனர் ⋆
முனிவர்கள் ⋆
வழி இது வைகுந்தற்கென்று ⋆
வந்தெதிரே ॥ **10.9.3** ॥

எதிர் எதிர் இமையவர் ⋆
இருப்பிடம் வகுத்தனர் ⋆
கதிர் அவர் அவர் அவர் ⋆
கைந்நிரை காட்டினர் ⋆
அதிர் குரல் முரசங்கள் ⋆
அலை கடல் முழக்கொத்த ⋆

மது விரி துழாய் முடி ⋆
மாதவன் தமர்க்கே ॥ **10.9.4** ॥

மாதவன் தமர் என்று ⋆
வாசலில் வானவர் ⋆
போதுமின் எமதிடம் ⋆
புகுதுக என்றலும் ⋆
கீதங்கள் பாடினர் ⋆
கின்னரர் கெருடர்கள் ⋆
வேதநல் வாயவர் ⋆
வேள்வி உள் மடுத்தே ॥ **10.9.5** ॥

வேள்வி உள் மடுத்தலும் ⋆
விரை கமழ் நறும் புகை ⋆
காளங்கள் வலம்புரி ⋆
கலந்தெங்கும் இசைத்தனர் ⋆
ஆண் மின்கள் வானகம் ⋆
ஆழியான் தமர் என்று ⋆
வாள் ஒண் கண் மடந்தையர் ⋆
வாழ்த்தினர் மகிழ்ந்தே ॥ **10.9.6** ॥

மடந்தையர் வாழ்த்தலும் ⋆
மருதரும் வசுக்களும் ⋆
தொடர்ந்தெங்கும் ⋆
தோத்திரம் சொல்லினர் ⋆
தொடு கடல் கிடந்த எம் கேசவன் ⋆
கிளர் ஒளி மணி முடி ⋆

குடந்தை எம் கோவலன் ⋆
குடி அடி யார்க்கே ॥ **10.9.7** ॥

குடி அடியார் இவர் ⋆
கோவிந்தன் தனக்கென்று ⋆
முடி உடை வானவர் ⋆
முறை முறை எதிர் கொள்ள ⋆
கொடி அணி நெடு மதிள் ⋆
கோபுரம் குறுகினர் ⋆
வடிவுடை மாதவன் ⋆
வைகுந்தம் புகவே ॥ **10.9.8** ॥

வைகுந்தம் புகுதலும் ⋆
வாசலில் வானவர் ⋆
வைகுந்தன் தமர் எமர் ⋆
எமதிடம் புகுதென்று ⋆
வைகுந்தத்தமரரும் ⋆
முனிவரும் வியந்தனர் ⋆
வைகுந்தம் புகுவது ⋆
மண்ணவர் விதியே ॥ **10.9.9** ॥

விதி வகை புகுந்தனர் என்று ⋆
நல் வேதியர் ⋆
பதியினில் பாங்கினில் ⋆
பாதங்கள் கழுவினர் ⋆
நிதியும் நற்சுண்ணமும் ⋆
நிறை குட விளக்கமும் ⋆

மதி முக மடந்தையர் ⋆
ஏந்தினர் வந்தே ॥ **10.9.10** ॥

‡ வந்தவர் எதிர் கொள்ள ⋆
மா மணி மண்டபத்து ⋆
அந்தமில் பேர் இன்பத்து ⋆
அடியரோடிருந்தமை ⋆
கொந்தலர் பொழில் ⋆
குருகூர்ச் சடகோபன் ⋆
சொல் சந்தங்கள் ஆயிரத்து ⋆
இவை வல்லார் முனிவரே ॥ **10.9.11** ॥

### பொய்கையாழ்வார் அருளிச்செய்த – முதல் திருவந்தாதி

உணர்வார் ஆர் உன் பெருமை ⋆
ஊழிதோறூழி ⋆
உணர்வார் ஆர் உன் உருவம் தன்னை ⋆
உணர்வார் ஆர் விண்ணகத்தாய் ! மண்ணகத்தாய் ! ⋆
வேங்கடத்தாய் ! ⋆
நால்வேதப் பண்ணகத்தாய் ! நீ கிடந்த பால் ॥ **68** ॥

வேங்கடமும் ⋆
விண்ணகரும் வெஃகாவும் ⋆
அஃகாத பூங்கிடங்கின் ⋆
நீள் கோவல் பொன் நகரும் ⋆
நான்கிடத்தும் நின்றான் இருந்தான் ⋆
கிடந்தான் நடந்தானே ⋆
என்றால் கெடுமாம் இடர் ॥ **77** ॥

### பேயாழ்வார் அருளிச்செய்த – மூன்றாம் திருவந்தாதி

‡ பண்டெல்லாம் வேங்கடம் ⋆
பாற்கடல் வைகுந்தம் ⋆
கொண்டங்குறைவார்க்குக் கோயில் போல் ⋆
வண்டு வளம் கிளரும் நீள் சோலை ⋆
வண் பூங்கடிகை ⋆
இளங்குமரன் தன் விண்ணகர் ‖ **61** ‖

### திருமழிசைப்பிரான் அருளிச்செய்த – நான்முகன் திருவந்தாதி

‡ ஏன்றேன் அடிமை ⋆
இழிந்தேன் பிறப்பிடும்பை ⋆
ஆன்றேன் அமரர்க்கமராமை ⋆
ஆன்றேன் கடன் நாடும் மண் நாடும் ⋆
கைவிட்டு ⋆
மேலை இட நாடு காண இனி ‖ **95** ‖

### நம்மாழ்வார் அருளிச்செய்த – திருவிருத்தம்

உண்ணாதுறங்காது ⋆
உணர்வுறும் எத்தனை யோகியர்க்கும் ⋆
எண்ணாய் மிளிரும் இயல்பினவாம் ⋆
எரி நீர் வளி வான் மண் ஆகிய எம் பெருமான் தனது
வைகுந்தம் அன்னாள் ⋆ கண்ணாய் அரு வினையேன் ⋆
உயிர் ஆயின காவிகளே ‖ **66** ‖

மலர்ந்தே ஒழிந்தில ⋆
மாலையும் மாலை பொன் வாசிகையும் ⋆
புலந் தோய் தழைப் பந்தர் தண்டுற நாற்றி ⋆

பொரு கடல் சூழ் நிலந் தாவிய எம் பெருமான் தனது
வைகுந்தம் அன்னாய் ! ⋆ கலந்தார் வரவெதிர் கொண்டு ⋆
வன் கொன்றைகள் கார்த்தனவே ‖ **68** ‖

உலாகின்ற கெண்டை ஒளி அம்பு ⋆
எம் ஆவியை ஊடுருவக் குலாகின்ற ⋆
வெஞ்சிலை வாள் முகத்தீர் ⋆
குனி சங்கிடறிப் புலாகின்ற வேலைப் புணரி அம் பள்ளி
அம்மான் ⋆ அடியார் நிலாகின்ற வைகுந்தமோ ⋆
வையமோ நும் நிலை இடமே ‖ **75** ‖

நம்மாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருவந்தாதி

கல்லும் கனை கடலும் ⋆
வைகுந்த வானாடும் ⋆
புல் என்றொழிந்தன கொல் ஏ பாவம் ⋆
வெல்ல நெடியான் நிறம் கரியான் ⋆
உள் புகுந்து நீங்கான் ⋆
அடியேனதுள்ளத்தகம் ‖ **68** ‖

திரு பெரிய பிராட்டியார் சமேத பரமபதநாதன் திருவடிகளே சரணம்